மேன்மதி கோவை தமிழ் மன்றம்

சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்

MENMATHI KOVAI TAMIL MANDARM

INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS

Double-Blind Peer-Reviewed | Open Access

E-ISSN: 3049-3676 (ONLINE)

Bimonthly | Online Publication | Tamil Language

Published: 23.10.2026

Volume 10 | Issue 10 | September – October 2026

States of Inner Emotion Expressing Anguish in Kuruntokai

Dr. K. Ramganesh

Assistant Professor - Department of Tamil

PSG College of Arts & Science, Coimbatore - 641 014

Contact: 9715984239

Email: ramganeshdharun@gmail.com

ORCID iD: 0000-0002-2402-0861

Abstract

Human existence is intertwined with life's emotions. These emotions serve as the roots for the transition to the next stage of life. For the majority of people, feelings of sorrow

play a more significant role than feelings of joy. Unfulfilled desires or dashed hopes become embedded in the subconscious, surfacing whenever the opportunity arises. There is no gender-based distinction here. In this context, this article examines how the dominance of emotions is expressed in Kuruntokai, a work of Sangam literature.

Keywords

Kuruntokai, emotions, mind, Sangam literature, pleasure, sorrow, helplessness, Human

குறுந்தொகையில் ஆற்றாமை புலப்படுத்தும் அகவுணர்வு நிலைப்பாடுகள்

முனைவர் கி.ராம்கணேஷ்

உதவிப்பேராசிரியர்

தமிழ்த்துறை, பி.எஸ்.ஜி கலை, அறிவியல் கல்லூரி

கோயம்புத்தூர் - 641 014 அழைக்க : 9715984239

மின்னஞ்சல் : ramganeshdharun@gmail.com

ORCID iD: 0000-0002-2402-0861

ஆய்வுச் சுருக்கம்

மனித உயிர்களின் வாழ்க்கை உணர்வுகளில் கலந்துள்ளது. வாழ்க்கையின் அடுத்த கட்ட நகர்தலுக்கு இவ்வுணர்வுகள் வேர்களாக அமைகின்றன. இன்ப உணர்வுகளினும் துன்பவுணர்வுகள் பெரும்பான்மையானவர்களின் வாழ்வினில் முக்கியப்பங்கு வகிக்கின்றன. இழந்த அல்லது நடைபெறாத நிராசைகள் ஆழ்மனதில் பதிந்து, வாய்ப்புக் கிடைக்கும் சூழல்களில் வெளிப்பட்டுவிடுகின்றன. இதில் ஆண், பெண் பாலினப் பாகுபாடு இல்லை. அவ்வகையில், சங்க இலக்கிய நூலான குறுந்தொகையில் உணர்வுகளின் ஆதிக்கம்

எவ்வகையில் வெளிப்படுகிறது என்பதை ஆராய்வதே இக்கட்டுரையாகும்.

திறவுச் சொற்கள்

குறுந்தொகை, உணர்வுகள், மனம், சங்க இலக்கியம், இன்பம், துன்பம், ஆற்றாமை, மனிதன்

முன்னுரை

உலகில் வாழும் உயிரினங்கள் அனைத்தும் உணர்வுகளால் பீடிக்கப்பட்டவை. மனதில் தோன்றும் எண்ணவோட்டங்கள் பல நேரங்களில் மற்றவருக்குப் புலப்படுத்த முடியாததாகவோ அல்லது வெளியே கூறக்கூடாததாகவோ அமைந்து விடுதல் உண்டு. உணர்வுகளைக் கூடுமானவரை கட்டுப்படுத்தும் ஆற்றல் சிலருக்கு உண்டு. எனினும் தடை செய்ய முடியாது. காதல் சார்ந்த செயல்பாடுகளுள் மனதின் ஓட்டம் கரைபுரண்டு ஓடும் ஆற்றாமையாய் வெளிப்பட்டு விடுவதை இலக்கியங்கள், ஓவியங்கள், சிற்பங்கள் எனப் பலவும் பிரதிபலித்துள்ளன. ஆண் பெண் என்ற பேதமில்லாமல் அனைவரும் வாழ்வினில் ஆற்றாமையை அனுபவித்தல் கண் கூடு. அவ்வகையில் ஆற்றாமை புலப்படுத்தும் அகவுணர்வுகளை சங்க இலக்கிய நூலான குறுந்தொகையின் வழிநின்று ஆராய்வதாகக் கட்டுரை அமைகின்றது.

கையில் ஊமன் கண்ணில் காத்தல்

தலைவனொருவன் தலைவியொருத்தியின் மீது மாளாத காதல் கொண்டிருந்தான். தலைவியைச் சந்திக்க இயலாத சூழலில் பலவாறு புலம்புகிறான். கடமைகளிலிருந்து தலைவனின் கவனம் சிதறுகிறது. உறவு, நட்பெனப் பலரும் தலைவனின் நிலையைக் கண்டு

கடிந்துரைத்தனர். தன்னுடைய ஆற்றாமை எப்படிப்பட்டது என்பதை உவமை காட்டி உணர்த்த முற்படுகிறான்.

“இடிக்குங் கேளிர் நுங்குறை ஆக
நிறுக்க லாற்றினோ நன்றுமற் றில்ல
ஞாயிறு காயும் வெவ்வறை மருங்கிற்
கையில் ஊமன் கண்ணிற் காக்கும்
வெண்ணெய் உணங்கல் போலப்
பரந்தன் றிந்நோய் நோன்றுகொளற் கரிதே.”[1]

- (**குறுந்.** 58)

தலைவியுடன் இருக்க வாய்ப்பில்லை. கடமையையும் செய்ய முடியவில்லை இரண்டிற்கும் இடைப்பட்ட நிலையில் தலைவனின் மனம் தடுமாறுகிறது. ஆற்றாமை கால்கோளிட்டது. ஆற்றாமைக்கான காரணிகளுள் பிரிவு முக்கியமான ஒன்றாகின்றது. கடமையைச் செய்வதற்கான செயல்பாடுகளை செய்யவொட்டாமல் செய்கிறது. பகலவனின் ஆற்றல் உச்சமடையும் வெயில் நேரத்தில் வெம்மையான பாறையிடத்தில் இருக்கும் வெண்ணையைப் பாதுகாக்க, கைகளைக் கொண்டு பாதுகாக்கலாமென்றால் கைகளில்லை. ஊமையாய் இருப்பதால் யாரிடமாவது தெரிவித்து, காக்கச் செய்யவும் வழிவகை இல்லை. உருகுவதைப் பார்த்துத் துயரப்பட கண்கள் மட்டும் உண்டு. வெண்ணெய் உருகுவதுபோல் மாளாத காதல் ‘தீ’ பற்றி உருக்குகிறது. அது பொறுத்துக்கொள்வதற்கு அரிதாக இருக்கின்றது. இதுவே ஆற்றாமையாய் புலப்படுகின்றது. ஒருவரின் துன்பம் அதனை அனுபவிப்பவரைத் தவிர மற்றவர்களால் உய்த்துணர முடியாது. சில

நேரங்களில் கைகளிலிருந்தும் பேசுவதற்கான ஆற்றல் இருந்தும் செயல்பட முடியாத நிலையைப் பாடல் காட்சிப்படுத்தியுள்ளது. இப்பாடல் தலைவனாகிய ஆண் மனநிலையில் வெள்ளிவீதியார் என்ற பெண்புலவரால் படைக்கப்பட்டது. பெண்ணாக இருந்து வெளிப்படுத்த முடியாத உணர்வைப் புலவர் ஆணைக் கருத்தாவாகக் கொண்டு உணர்த்தியுள்ளார் எனக் கொள்ளவும் இடமுண்டு.

உயவுநோய் அறியாத ஊர்

பிரிவு நிகழும் போது மகிழ்ச்சியைத் தரக்கூடியவையும் துன்பத்தைத் கொடுக்கும் என்பதைத் தலைவி ஒருத்தி தெரிவிக்கும் பாடலொன்றில் இடம் பெற்றுள்ளது. ஆற்றாமையின் வெளிப்பாடு உச்சத்தை அடைந்திருக்கிறது. இரவு நேரத்தூக்கமும் காற்றின் மகிழ்ச்சியும் மனிதனுக்கு மிகவும் பிடித்தமானவை. தலைவனின் பிரிவால் வருந்தும் தலைவிக்கு மகிழ்ச்சியைத் தரக்கூடிய எந்த நிகழ்வும் நடக்கவில்லை. மாறாகத் துன்பத்தை வலுப்படுத்தும் சூழல்கள் மிகுகின்றன. சொல்லொணாத் துயரத்தை அனுபவிக்கும் தலைவியானவள் ஆற்றாமை அலைக்கழிக்க வாய்விட்டுப் புலம்பி அரற்றுகிறாள்.

"முட்டு வேன்கொல் தாக்கு வேன்கொல்
ஓரேன் யானுமோர் பெற்றி மேலிட்டு
ஆஅ ஒல்லெனக் கூவு வேன்கொல்
அலமரல் அசைவளி அலைப்பவென்
உயவுநோ யறியாது துஞ்சும் ஊர்க்கே."[2]

- (குறுந். 28)

இரவுப்பொழுதில் இதமாகக் காற்று வீசுகின்றது. ஊரில் உள்ளோர் ஆழ்ந்து துயில் கொண்டுள்ளனர். தலைவனின் மீது கொண்ட அன்புப்(காமம்) பெருக்கம் தலைவியின் உறக்கத்தைப் பாழ்படுத்தியது. துயர் பொறுக்க முடியாதவள் அரற்றுகிறாள். எல்லோருக்கும் கிடைத்த ஒன்று தனக்கு மட்டும் கிடைக்கவில்லையே என்ற காழ்ப்பு தலைவியின் சினத்தீயைப் பரவச் செய்கிறது. எனக்கு மிகுதியான துயரம் தரும் என்னுடைய நோயை உணர்ந்து கொள்ளாமல்இ கவலையின்றித் தூங்கும் இவ்வூர் மக்களை நினைத்து நான் முட்டிக் கொள்வேனா? அவர்களை ஏதாவது ஒன்று செய்து தாக்குவேனா? ஒரு போலிக் காரணத்தை முன்வைத்துஇ வாய்விட்டு ஆவென்றும் ஒல்லென்றும் கூச்சலிட்டு எல்லோரையும் கூப்பிடுவேனா? என்ன செய்வது என்பதை அறியேன் என்ற கையற்ற நிலையைத் தெரிவிக்கிறாள். மனதால் முட்டுதல், மெய்யினால் தாக்குதல், வாயினால் அரற்றுதல் என்ற மூன்றையும் (மனம்இ மெய்இ வாக்கு) செய்ய எத்தனிக்கிறாள். இச்செயலால் ஊரார் அலர் தூற்றியோ வேறு ஏதாவது செய்தோ தன்னையும் தலைவனையும் சேர்த்து வைத்துவிடுவார்கள் என்ற உள்ளுதலின் வெளிப்பாடாக தலைவியின் இக்கூற்று ஔவையாரால் காட்சிப் படுத்தப்பட்டுள்ளது. தாங்கமுடியாமை,இயலாமை, மனத்துயரம் இவை மூன்றும் கலந்து ஆற்றாமை அமைந்துள்ளது.

“இன்பத்தை வெறுத்தல் துன்பத்துப் புலம்பல்
எதிர் பெய்து பரிதல் ஏதம் ஆய்தல்
பசி அட நிற்றல் பசலை பாய்தல்
உண்டியின் குறைதல் உடம்பு நனி சுருங்கல்

கண் துயில் மறுத்தல் கனவொடு மயங்கல்

பொய்யாக் கோடல்...[3]

- **(தொல். மெய்ப். நூ.எ.266)**

தொல்காப்பியர் மெய்ப்பாட்டியலில் தலைவியிடத்து நிகழ்வனவாகக் குறிப்பிடும் மெய்ப்பாடுகளுள் பல ஆற்றாமைப் புலப்பாடுகளாக விளங்குவது இவண் ஒப்பு நோக்கத்தக்கது.

ஆற்றாமையில் பாகுபாடு

தலைவியால் தன் காதல் ஏற்கப்படாத நிலையில் தலைவன் மடலேறுவான் என இலக்கியங்கள் பகர்கின்றன. தன்குறை தீரப் பெறாத தலைவன் பனங்கருக்கால் குதிரைபோல் ஒன்றைச் செய்வான். தன் உடல் முழுவதும் சாம்பலோ, திருநீறோ பூசிக்கொண்டு எலும்பு, எருக்கம்பூ உள்ளிட்டவற்றை மாலையாகக் கட்டி கழுத்தில் அணிந்து கொண்டு தனக்குப் பிடித்த தலைவியின் உருவத்தை பலரும் பார்க்கும்படியாக ஒரு துணியில் ஓவியமாகத் தீட்டி எடுத்துக் கொண்டு பனங்கருக்குக்குக் குதிரையை தன் உடலில் கட்டி இழுத்த வண்ணம் முச்சந்தி, நாற்சந்தி எனப் பல இடங்களுக்கும் செல்வான். பனங்கருக்கால் தலைவனின் உடல் கீறப்பட்டு, இரத்தம் வெளியாகி இறப்பினைக் கொடுக்கும் எல்லை வரை செல்வான். இதுவே மடலேறுதல் எனப்படுகிறது. தலைவியை அடையமுடியாத ஆற்றாமையில் தலைவன் உயிர்விடத் துணியும் நிலை இதுவாகும். தலைவிக்கும் இதனால் பழி நேரும். தலைவி மடலேறுவதுபோல் சங்ககாலப்பாடல்கள் பதிவு செய்யவில்லை. பிற்கால பக்தி இலக்கியங்களுள் கடவுளைக் காதலனாகக் கொண்ட பெண் மடலேறுவதாகக் கூறும் குறிப்புகள் காணக்கிடைக்கின்றன. பெண்

மடலேறக் கூடாது என்பது சங்ககாலத்தில் சட்டம் போல் இருந்ததாக எண்ணமுடிகிறது. குறுந்தொகையில் மடலேறுதல் பற்றிய செய்திகள் உண்டு. தலைவன் மடலேறுவேன் எனக் கூறிப் பாடுவதாக இலக்கியங்கள் பதிவு செய்துள்ளன. தலைவன் மடலேறினான் என்ற குறிப்பு எங்கும் காணப்படவில்லை.

"மாவென மடலும் ஊர்ப பூவெனக்
குவிமுகிழ் எருக்கங் கண்ணியும் சூடுப
மறுகி னார்க்கவும் படுப
பிறிது மாகுப காமங்காழ் கொளினே."[4]

(**குறுந்**. 17)

தலைவி தன் காதலை ஏற்காவிட்டால் மடலேறுவேன் எனத் தலைவியின் தோழியிடம் தலைவன் தெரிவிப்பதாக மேற்கண்ட பாடல் அமைந்துள்ளது. ஆணும் பெண்ணும் சமம் என வாதிட்டாலும் பெண் மேற்கொள்ளக் கூடாது என்ற சில சட்டங்களில் ஒன்றாக மடலேறுதல் இருப்பதனை,

"கடலன்ன காமம் உழந்தும் மடலேறாப்
பெண்ணின் பெருந்தக்கது இல்"[5]

- (**குறள்**. 1137)

"எத்திணை மருங்கினும் மகடூஉ மடல்மேற்
பொற்புடை நெறிமை இன்மையான"[6]

- (**தொல்.அகத். நூ.எ**.38)

திருக்குறளும் தொல்காப்பியமும் குறிப்பிட்டுள்ளன. ஆற்றாமையிலும் பாகுபாடு இருந்ததனை இதன்கண் அறிய முடிகிறது.

மயிலின் முட்டை மந்தியின் குட்டி

தலைவன் மீது மிகுந்த நம்பிக்கை கொண்டிருந்தாள் தலைவி. தலைவனின் மீது மிகுதியான காதல் கொண்டு துடித்தாள். வருவேன் எனக் கூறிச் சென்றவன் வரவில்லை. துயரத்தில் ஆழ்ந்தாள் தோழி சமாதானம் செய்ய முற்பட்டாள். முயற்சி பலனளிக்கவில்லை. ஆற்றாமை வெற்றி கொண்டது.

“கான மஞ்ஞை யறையீன் முட்டை
வெயிலாடு முசுவின் குருளை உருட்டும்
குன்ற நாடன் கேண்மை என்றும்
நன்றுமன் வாழி தோழி உண்கண்
நீரொ டொராங்குத் தணப்ப
உள்ளா தாற்றல் வல்லு வோர்க்கே.”[7]

- (**குறுந்.** 38)

மந்தியாகிய குட்டிகள் மயிலின் முட்டையை ஓர் உயிராகக் கருதாமல் உருட்டி விளையாடுவதால் முட்டை உடைந்து அழியக்கூடும். அதுபோல், தலைவனுடைய பிரிவால் தலைவியின் உயிராகிய காதல் அழியலாம் என்று உள்ளுறை உவமமாகத் தலைவி குறிப்பிடுகின்றாள். மயிலின் முட்டையைக் குரங்குக் குட்டிகள் உருட்டி விளையாடுவதைப் போல் தலைவனின் பிரிவினால் தலைவனுக்கும் தலைவிக்கும் இடையே உள்ள காதல் ஊராரால் அலர் தூற்றப்பட்டு சிரிப்புக்குக் காரணமாகிவிடும் நிலையைப் பாடல் எடுத்துரைக்கிறது. குரங்குக் குட்டி மயிலின் முட்டையைப் பாவம் எனக் கருதாதது போல் தலைவனும் தன்னைப் பற்றி நினையாது துயரப்படுத்துகிறார்

என்பதைத் தலைவி வெளிப்படுத்துகிறாள். ஆற்றாமை துயர் மிக்கது என்பதைத் தலைவி உணர்த்திவிடுகின்றாள்.

கொல்லன் உலைத் துருத்தி

இல்வாழ்க்கைக்குத் தேவையான பொருளினைப் பெற தலைவனின் உள்ளம் விழைகிறது. தலைவியைப் பிரிந்து செல்லுதல் துயர் தரினும் பொருள் ஈட்டுதல் இன்றியமையாததது என்பதைப் புரிந்து தலைவன் பிரிந்து சென்றான். தலைவியால் பிரிவுத் துயரைத் தாள முடியவில்லை. பிரிவுத் துயரினும் மிகுதியாகப் பொருள் தேடச் சென்ற இடத்தில் அவனுக்கு ஏதேனும் ஆபத்து நேர்ந்து விடுமோ என்ற எண்ணமும் அவளைப் பதைபதைக்கச் செய்துவிடுகிறது. பிரிவுத் துயரால் தவிக்கும் தலைவிக்குத் தோழி ஆறுதல் கூறுகிறாள். தலைவி தன் துயரத்தின் மிகுதியை வெளிப்படுத்துகிறாள்.

“தாஅ அம் சிறை நொப்பறை வாவல்
பழுமரம் படரும் பையுள் மாலை
எமியம் ஆக ஈங்குத் துறந்தோர்
தமியர் ஆக இனியர் கொல்லோ?
ஏழூர்ப் பொதுவினைக்கு ஓரூர் யாத்த
உலை வாங்கு மிதிதோல் போலத்
தலைவரம்பு அறியாது வருந்தும் என் நெஞ்சே”[8].

- (குறுந். 172)

வலிமையினையுடைய அழகான சிறகினையும் பறக்கும் இயல்பையும் உடையன வெளவால்கள், பழுத்த மரங்களை நோக்கிச் செல்லும் வெளவால்களும் மாலையில் தனக்குரிய இருப்பிடத்தை அடைந்துவிடும். துன்பத்தைத் தரும் மாலைக் காலத்தில் நாம் தனியாக

இருக்கும்படியாயிற்று. இங்கு எம்மைவிட்டுப் பிரிந்த தலைவர் தாம் தனிமையாக இருப்பதால் மகிழ்ச்சியாக இருப்பாரோ? ஏழு ஊரில் உள்ளவர்களுக்குப் பொதுவாகப் பயன்படும்படி, ஓர் ஊரில் அமைத்த, கொல்லன் உலையில் பொருத்திய துருத்தியைப் போல, வரையறுக்க முடியாத துன்பத்தை அடைந்து என் நெஞ்சம் துடிக்கிறது என்கிறாள் தலைவி.

ஓர் ஊரில் இருப்பவர்கள் கொடுக்கும் வேலையைச் செய்வதே கடினமான செயல். அவ்வாறிருக்க ஏழு ஊரில் உள்ளவர்கள் கொடுக்கும் வேலையைச் செய்து முடிப்பதற்கு ஒரே ஒரு உலையில் உள்ள துருத்தி இடைவிடாமல் வேலை செய்வதுபோல், என் நெஞ்சு இடைவிடாமல் தலைவனை நினைத்து வருந்துகிறது என்று தலைவி கூறுகிறாள். கொல்லன் உலைக்களம் வெப்பத்தால் தகிப்பதைப் போலவும் ஏழு ஊரில் இருப்பவர்களுக்கு தனியொராளாக இருந்து உலைக்களத்தில் இருந்து பணியாற்றுவது மிகவும் கடினம் என்பதும் பெறப்பட்டுள்ளது. தனது ஆற்றாமையின் தீவிரத்தைக் கொல்லன் உலைத் துருத்தியோடு உவமிக்கிறாள் தலைவி.

முடிவுரை

வாழ்க்கையில் இன்பம் துன்பம் இரண்டும் இரண்டு கண்களாகத் திகழ்பவை. இன்பத்தின் இனிமையைச் சுவைத்தவர்களை விடவும் துன்பத்தின் துவர்ப்பை சுவைத்தவர்களே அதிகம் என்று என்னும்படியாகப் பலரின் வாழ்வியல் அமைந்துள்ளது. எதையும் செயல்படுத்த முடியாத சூழலில் ஆற்றாமை அங்கு ஆசனம் போட்டு அமர்ந்து விடுகிறது. ஆண் பெண் பேதமின்றி அனைவரிடமும் ஆற்றாமை நிலைத்திருக்கிறது. இருப்பினும் பெண்ணின் ஆற்றாமை

மிகுதியாக இருக்கின்றது. அதன் வெளிப்பாடாக அரற்றலும் புலம்பலும் அழகையும் புலனாகிவிடுகிறது என்பதைக் குறுந்தொகைப் பாடல்கள் சுட்டியுள்ளன. தன்னைத் தானே சமாதானம் செய்துகொள்வதும் எதையும் ஏற்று அதன் வழியில் நடப்பதும் ஆற்றாமையின் பிடியிலிருந்து விலகி ஆற்றலுடன் செயல்பட வழிவகுக்கும்.

அடிக்குறிப்புகள்

1. குறுந்தொகை - பா. எண் - 58 - ப. எண் - 140 - உ.வே. சாமிநாதையர் உரை
2. குறுந்தொகை - பா. எண் - 28 - ப. எண் - 73 - உ.வே. சாமிநாதையர் உரை
3. தொல்காப்பியம் - பொருளதிகாரம் - மெய்ப்பாட்டியல் – நூ. எண் -266 – ப. எண் - 366 - இளம்பூரணனார் உரை
4. குறுந்தொகை - பா. எண் - 17 - ப. எண் - 44 - உ.வே. சாமிநாதையர் உரை
5. திருக்குறள் - கு . எண் - 1137 - ப. எ - 429 - பரிமேலழகருரை
6. தொல்காப்பியம் - பொருளதிகாரம் - அகத்திணையியல் – நூ . எண் -38 - ப. எண் - 35 - இளம்பூரணனார் உரை
7. குறுந்தொகை - பா. எண் - 38 - ப. எண் - 97 - உ.வே. சாமிநாதையர் உரை
8. குறுந்தொகை - பா. எண் - 172 - ப. எண் - 368 - உ.வே. சாமிநாதையர் உரை

துணை நின்ற நூல்கள்

1. குறுந்தொகை - உ.வே. சாமிநாதையர் உரை - இரண்டாம் பதிப்பு - 1947 - கபீர் அச்சுக் கூடம் - சென்னை
2. தொல்காப்பியம் - பொருளதிகாரம் - இளம்பூரணனார் - சாரதா பதிப்பகம் - சென்னை -600 014

3. திருக்குறள் - பரிமேலழகருரை - சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், திருநெல்வேலி

Reference Works

1. Kuruntokai – Commentary by U.V. Swaminatha Iyer - Second Edition - 1947 - Kabir Press – Chennai
2. Tolkappiyam – Porulatikaram – Ilampuranar - Saradha Pathippagam – Chennai - 600 014
3. Tirukkural – Commentary by Parimelazhagar – Saiva Siddhanta Works Publishing Society, Tirunelveli.